

நிறுவன தலைவர் - சி.ஆர்.டி.எஸ்
**CHAIRMAN - CRDS**

# செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டு சங்கம்
# Chengalpattu Rural Development Society (CRDS)

பதிவு எண் : 40/1990

## 35-வது ஆண்டறிக்கை




ஏப்ரல் 2024 முதல் மார்ச் 2025 வரை

# செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கம்

## திம்மாவரம், செங்கல்பட்டு - 603 101

### 35 வது ஆண்டறிக்கை (01.04.2024 முதல் 31.03.2025)

**முன்னுரை:**

செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கம் 1990 - ஆம் ஆண்டு அரசின் சமூக சங்கங்களின் சட்டவிதிகளின்படி முறையாக பதிவு செய்யப்பட்டு கடந்த 35 ஆண்டுகளாக காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள கிராமப்புற ஏழை, எளிய மக்கள் மற்றும் மாற்றுத்திறனாளர்களின் வாழ்க்கை மேம்பாடு அடைய பல்வேறு சமூகப்பணிகளை தொடர்ந்து செய்து வருகின்றது. மேலும் செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள சமூகத்தில் மிகவும் நலிவடைந்த மற்றும் ஒடுக்கப்பட்ட பெண்கள், சிறார்கள், பழங்குடியினா் மற்றும் தலித் மக்களின் வாழ்வியல் முன்னேற்றத்திற்காக 2 மாவட்டங்கள், 10 ஒன்றியங்கள், 120 கிராமங்கள், 532 மகளிர் குழுக்கள், 7205 மகளிர்குழு உறுப்பினர்களை கொண்டு சிறப்பாக வழிநடத்தி வருகின்றது. மேலும் இவர்களுக்கு வாழ்வாதார பயிற்சி, தலைமைத்துவ பயிற்சி, தொழில் முனைவோர் பயிற்சி, அரசியல் பங்கேற்பு பயிற்சி, தனிநபர் மேம்பாட்டு பயிற்சி, வருமான பெருக்குத்திட்ட பயிற்சி, சுயதொழில் பயிற்சி என பல்வேறு பயிற்சிகளையும் அளித்து ஊக்குவித்து தொடர்ந்து வழிகாட்டியும் வருகின்றது. சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் வழியாக கடந்த ஏப்ரல் மாதம் 2024 முதல் மார்ச் மாதம் 2025 வரையிலான விரிவான அறிக்கையினை உங்கள் அனைவரின் முன் சமர்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

**சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் குறிக்கோள்:**

- தன்மானம்
- தன்னிறைவு
- தன்னாட்சி

**விருதுவாக்கு:**

நீதியுள்ள சமுதாயத்தை உருவாக்கிட...

**சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் பணித்தளங்கள்:**

**மாவட்டங்கள்**: செங்கல்பட்டு, காஞ்சிபுரம்

**ஒன்றியங்கள்:**

- திருப்போரூர்
- திருக்கழுக்குன்றம்
- காஞ்சிபுரம்
- வாலாஜாபாத்

- ➢ உத்திரமேரூர்
- ➢ அச்சிறுப்பாக்கம்
- ➢ காட்டாங்கொளத்தூர்
- ➢ இலத்தூர்
- ➢ சித்தாமூர்
- ➢ மதுராந்தகம்

**சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள்:**

1. காரிதாஸ் இந்தியா - பெங்கல் புயல் நிவாரணப்பணிகள்
2. கோல்பிங் இந்தியா (Kolping India)
3. நாபின்ஸ் நுண்கடன் திட்டம் (Nabfins)
4. பெண்கள் கூட்டமைப்பு (Women Federation)
5. ஆக்ஷன் இந்தியன் திட்டம் (Aktion Indine)
6. இத்தாலி கத்தோலிக்க ஆயர் பேரவையின் (IBC) நலிவடைந்த பெண்களுக்கான சுகாதாரம் மற்றும் தொழிற்பயிற்சி திட்டம்

### 1. காரிதாஸ் இந்தியா - பெங்கல் புயல் 2024 நிவாரண பணிகள்

01.12.2024 அன்று தமிழகத்தில் ஏற்பட்ட பெங்கல் புயல் மற்றும் வெள்ளத்தால் செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டது. புயல் மற்றும் மழை வெள்ளத்தின் தாக்கத்தை தொடர்ந்து காரிதாஸ் இந்தியா மற்றும் செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டு சங்கம் இணைந்து செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் புயல் மற்றும் பெரும் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகளை மேற்கொண்டது. இதில் பெரும் மழையால் பாதிக்கப்பட்ட 167 விளிம்புநிலை குடும்பங்களை கண்டறிந்து அவர்களுக்கான அவசரகால நிவாரண உதவி பொருட்கள் அடங்கிய (ரூ.1200) கொண்ட தொகுப்பு (அரிசி, மளிகைப்பொருட்கள், போர்வை) உடனடியாக வழங்கப்பட்டது. வெள்ள நிவாரணத்திற்காக வழங்கப்பட்ட தொகை மொத்தம் ரூ.2,00,400.00 **(இரண்டு இலட்சத்து நான்கு நூறு மட்டும்)** ஆகும்.








## 2. கோல்பிங் இந்தியா திட்டம்:



செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கத்தின் ஓர் அங்கமாக அகில உலக கத்தோலிக்க திருச்சபையின் மக்கள் செயல்பாட்டு நிறுவனமான "கோல்பிங் இயக்கம்" கடந்த 21 அண்டுகளுக்கும் மேலாக நமது மறைமாவட்டத்திலுள்ள 42 பங்குகளில் 73 கோல்பிங் குழுக்கள் உருவாக்கப்பட்டு இதில் 1044 நபர்கள் உறுப்பினர்களாக இணைக்கப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தின் வழியாக கடந்த 21 ஆண்டுகளில் வருவாய் பெருக்குத் திட்டத்திற்கு கடன் பெற்று இதுவரை 1431 நபர்கள் சுழற்சி முறையில் கடன்பெற்று பயன்பெற்றுவருகின்றனர். இதுவரை அவர்களுக்கு கோல்பிங் இந்தியா நிறுவனத்தின் வழியாக அளிக்கப்பட்டுள்ள கடன்தொகை மொத்தம் ரூ.1,20,49,850.00 (ரூபாய். ஒரு கோடியே இருபது இலட்சத்து நாற்பத்தி ஒன்பதாயிரத்து எண்ணூற்று ஐம்பது) ஆகும்.

### குறிக்கோள்:

கோல்பிங் உறுப்பினர்கள் பொறுப்புள்ள மனிதர்களாகவும், பொறுப்புள்ள குடும்ப உறுப்பினர்களாகவும், தகுதிவாய்ந்த சுதந்திரமான உழைப்பாளர்களாகவும், பொறுப்புள்ள சமூக உறுப்பினர்களாகவும் விளங்கிட வேண்டும் என்பதுதான் இத்திட்டத்தின் தலையாய குறிக்கோளாக உள்ளது.

### நோக்கம்:

கோல்பிங் உறுப்பினர்கள் அனைவரையும் ஆன்மீகத்தோடு இணைந்த பொருளாதார முன்னேற்றத்தில் தன்னிறைவை நோக்கி பயணிக்கச் செய்தல்.

### சமூக நல்லிணக்க செயல்பாடுகள்:



கோல்பிங் குழுக்களில் உள்ள உறுப்பினர்கள் அனைவரும் நற்செய்தியின் மதிப்பீடுகளை தங்கள் வாழ்க்கையில் வாழ்ந்து காட்டுவதற்கு பங்குத்தளங்கள் மற்றும் கிளைப்பங்குகளில் உள்ள பல்வேறு பொதுச்சேவை பணிகளில் பங்கு பணியாளர்களுடன் தன்னார்வமுடன் ஈடுபட்டு பணிசெய்து வருவது போற்றுதற்குரியதாக அமைந்திருக்கிறது.

தங்கள் கிராமத்தின் வளர்ச்சியை கருத்தில்கொண்டு கிராமத்தில் உள்ள ஏழை, எளிய மக்களின் ஆன்மீக மற்றும் பொருளாதார தேவைகளை அறிந்து உதவும் பணிகளை கோல்பிங் குழுக்கள் மேற்கொண்டு வருகின்றன.

நலிந்தோருக்கு உதவுதல், முதியோர் இல்லம் சந்திப்பு, ஏழை எளிய மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல், ஆதரவற்று இறக்கும் விசுவாசிகளை நல்லடக்கம் செய்தல், நோய்வாய்ப்பட்டோருக்காக செபித்தல்,

ஆலய வளாகம் மற்றும் பொது இடங்களை தூய்மைப்படுத்துதல் போன்ற பணிகளை கோல்பிங் இயக்கங்கள் சிறப்பாக செய்து வருகின்றன.

**கோல்பிங் திட்டத்தின் வழியாக நிறைவேற்றப்படும் திட்டங்கள்:**

- வருவாய் பெருக்குத்திட்டம் (Income Generation Programme)
- கூட்டுவருவாய் பெருக்குத்திட்டம் (Collective Income Generation Programme)
- கறவைமாடு வளர்ப்புத்திட்டம் (Milch Animal Programme)
- வீடுகட்டும் திட்டம் (Housing Support Programme)
- தொழிற்பயிற்சி கல்வித்திட்டம் (Vocational Training Programme)
- தனிநபர் கழிவறைத்திட்டம் (Individual Toilet Programme)

**வீடு கட்டும் திட்டம்**

ஏழை எளிய மக்கள் மற்றும் ஓலை வீட்டில் வசிப்பவர்கள் சொந்தமாக கான்கிரீட் வீடு கட்டி வாழ வழிவகை இல்லாமல் குறைந்த அளவே முதலீடு வைத்துக்கொண்டு எப்படி வீடு கட்டுவது என்று அல்லல்படும் குடும்பங்களை தேர்வு செய்து, அவர்களும் சமூகத்தில் தரமான வீடு கட்டி வாழும் வகையில் கோல்பிங் இந்தியா நிறுவனம் வீடு கட்டும் திட்டம் வழியாக ரூ.50,000/- கடன் உதவி வழங்கி எளிய தவணையில் கடன் திருப்பம் செய்ய வழிவகை செய்கிறது. இந்த கடன் தொகையில் 10 சதவீதம் மானியமாகவும், மீதி தொகை மட்டும் கடன் தொகையாகவும் திரும்ப செலுத்த வேண்டும்.



**கறவை மாடுகள் வளர்ப்பு திட்டம்**

கிராம மற்றும் நகர்ப்புற பகுதியில் வாழக்கூடிய ஏழை எளிய மக்களும் பயன்பெறும் வகையில் உருவானதுதான் கறவைமாடுகள் வளர்ப்புத் திட்டமாகும். இத்திட்டத்தில் கறவை மாடுகள் வளர்ப்பதற்கான அனுபவமும் ஆர்வமும் இருந்தால் மட்டும் போதும். இத்தொழிலை வெகு சுலபமாக செய்து வருமானத்தை ஈட்டிட முடியும். மேற்கண்ட அனைத்து கோல்பிங் திட்டக் கடன்களும் 12 சதவீதம் சேவைக்கட்டணத்துடன் (ரூ.100க்கு ரூ.1) கடனை தவணை முறையில் வசூலித்து கோல்பிங் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

**கோல்பிங் திட்டத்தின் வழியாக வழங்கப்படும் பயிற்சிகள்:**

- கிராம அளவில் திட்ட அறிமுகம்
- கிராம அளவில் புதிய குழுக்களுக்கான கருத்து பகிர்வு
- சேமிப்பு மற்றும் கடன் மேலாண்மை பயிற்சி
- தலைமைத்துவ பயிற்சி
- புத்தக பராமரிப்பு பயிற்சி

- ❖ வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு பயிற்சி
- ❖ சுகாதார விழிப்புணர்வு பயிற்சி
- ❖ தொழில்முனைவோர் பயிற்சி
- ❖ சுற்றுச்சூழல் மேலாண்மை பயிற்சி
- ❖ கிராம அளவிலான கோல்பிங் கூட்டமைப்பு பயிற்சி
- ❖ தொழில் வாய்ப்புகளை கண்டறிதல்
- ❖ கிராம மக்கள் பங்களிப்புடன் கூடிய பகுப்பாய்வு செய்தல்
- ❖ பஞ்சாயத்து அமைப்பு மற்றும் வலைப்பின்னல் பயிற்சி
- ❖ வழக்காடுதல் மற்றும் மனித உரிமைகள்
- ❖ கிராம திட்டமிடல் கூட்டம்
- ❖ வீட்டுத்தோட்டம் மற்றும் சமூக காடுகள் திட்டம்
- ❖ மரக்கன்றுகள் நடுதல் மற்றும் பாதுகாத்தல்
- ❖ பாரம்பரிய தொழில்களின் சாதக பாதக நிலைப்பாடுகள்

**கோல்பிங் உறுப்பினர்களின் வளர்ச்சிகள்:**

- ❖ கிராமத்தில் பின்தங்கிய மக்கள் கோல்பிங் வழியாக குழுக்களாக இணைக்கப்படுகின்றனர்.
- ❖ சேமிக்கும் பழக்கம் ஏற்படுத்தப்பட்டு ரூ.100 முதல் ரூ.1000 வரை சேமிக்கின்றனர்.
- ❖ சமூக ஈடுபாடுகளில் கவனம் செலுத்துகின்றனர்.
- ❖ பொருளாதார முன்னேற்றம் காண முடிகின்றது.
- ❖ திட்டத்தின் பயிற்சிகளில் கலந்துக்கொள்வதன் மூலம் தனிநபர், குடும்பம், குழு, கிராமங்களின் இன்றைய சூழல்கள் பற்றி தெரிந்து கொள்கின்றனர்.
- ❖ தனிநபர் தொழிற்பயிற்சி மூலம் சுய தொழில் செய்வோர் அதிகரித்துள்ளனர்.

**கோல்பிங் இறப்பு நிதி:**

கோல்பிங் இயக்க உறுப்பினர்கள் இயற்கை மற்றும் விபத்துக்கள் காரணமாக இறக்க நேரிட்டால் அவர்களின் குடும்பத்திற்கு கோல்பிங் இறப்புநிதி வழியாக ரூ.5000 வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் வழியாக இவ்வாண்டு பயன்பெற்றவரின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | பங்கு/கிராமம் | குழு பெயர் | பயனாளி | தொகை |
|---|---|---|---|---|
| 1 | கோவளம் | கார்மேல் அன்னை | திருமதி. மேரி ஆன் | ரூ. 5000.00 |
| 2 | வளையபுத்தூர் | இணைந்த கைகள் | திருமதி. அன்புமணி | ரூ. 5000.00 |
| 3 | செண்டிவாக்கம் | அந்தோணியார் | திரு. மலையப்பன் | ரூ. 5000.00 |

**கோல்பிங் இந்தியா திட்டத்தின் வழியாக கடன் பெற்றவர்களின் விவரம்:**

| வ. எண் | பங்கு/ கிராமம் | குழு பெயர் | பயனாளி | கடன் திட்டம் | கடன் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | திம்மசமுத்திரம் | சவேரியார் கோல்பிங் | ரோஸ்லின்மேரி | வீடு | 50,000.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | தச்சூர் | மழைமலைமாதா | அஜந்தாமேரி | வீடு | 50,000.00 |
| 3 | மேல்மணப்பாக்கம் | ஓம்சக்தி கோல்பிங் | செல்வி | வீடு | 50,000.00 |
| 4 | அந்தோணியார்நகர் | வானவில் கோல்பிங் | ஆரோக்கியமேரி | கறவைமாடு | 15,000.00 |
| 5 | ஒரகடம் | ஆரோக்கியமாதா | தனம் | கறவைமாடு | 15,000.00 |
| 6 | ஒரகடம் | கன்னியம்மன் | கவிதா | கறவைமாடு | 15,000.00 |
| 7 | ஒரகடம் | கன்னியம்மன் | வள்ளி | கறவைமாடு | 15,000.00 |
| 8 | அந்தோணியார்நகர் | வானவில் கோல்பிங் | சரண்யா | கறவைமாடு | 15,000.00 |
| 9 | நேமம் | அன்னை பாத்திமா | கலா | கறவைமாடு | 15,000.00 |
| 10 | நேமம் | அன்னை தௌலத் | ஏம்ஜாபீ | கறவைமாடு | 15,000.00 |
| 11 | நேமம் | அன்னை தௌலத் | சங்கீதா | கறவைமாடு | 15,000.00 |
| 12 | கே.கே.புதூர் | ஆரோக்கிய மாதா | தனப்பாக்கியம் | கறவைமாடு | 15,000.00 |
| 13 | கே.கே.புதூர் | அம்பேத்கர் கோல்பிங் | ஜெயமேரி | கறவைமாடு | 15,000.00 |
| 14 | ஆலத்தூர் | ஆலயமணி கோல்பிங் | மேரி | கழிவறை | 15,000.00 |
| 15 | ஆலத்தூர் | ஆலயமணி கோல்பிங் | அம்பிகா | கழிவறை | 15,000.00 |
| 16 | அந்தோணியார்நகர் | லீலிமலர் கோல்பிங் | மெர்லின்மேரி | கழிவறை | 15,000.00 |
| 17 | அந்தோணியார்நகர் | லீலிமலர் கோல்பிங் | திரேசா | கழிவறை | 15,000.00 |
| 18 | அந்தோணியார்நகர் | வானவில் கோல்பிங் | ரீமா | கழிவறை | 15,000.00 |
| 19 | அந்தோணியார்நகர் | லீலிமலர் கோல்பிங் | அமலோற்பவம் | கழிவறை | 15,000.00 |
| 20 | அந்தோணியார்நகர் | வானவில் கோல்பிங் | சாந்தி | கழிவறை | 15,000.00 |
| 21 | மாமல்லபுரம் | திருகுடும்பம் கோல்பிங் | ரோஸ்மேரி | கழிவறை | 15,000.00 |
| 22 | ஒரகடம் | சகாயமாதா கோல்பிங் | கமலா | கழிவறை | 15,000.00 |
| 23 | ஒரகடம் | சகாயமாதா கோல்பிங் | வசந்தா | கழிவறை | 15,000.00 |
| 24 | ஒரகடம் | லூர்துமாதா கோல்பிங் | தேவகி | கழிவறை | 15,000.00 |
| 25 | கே.கே.புதூர் | ஆரோக்கியமாதா | அமலி | கழிவறை | 15,000.00 |
| 26 | கே.கே.புதூர் | அம்பேத்கர் கோல்பிங் | சுகுனாமேரி | கழிவறை | 15,000.00 |
| 27 | நேமம் | அன்னை பாத்திமா | ஹரிஜாபீவி | கழிவறை | 15,000.00 |
| 28 | நேமம் | புனித அந்தோணியார் | லீலாவதி | கழிவறை | 15,000.00 |
| 29 | உத்தமநல்லூர் | புனித அந்தோணியார் | ஆரோக்கியமேரி | தொழிற்கல்வி | 15,000.00 |
| 30 | மாமல்லபுரம் | திருக்குடும்பம் | வாணி | தொழிற்கல்வி | 15,000.00 |
| 31 | திம்மாவரம் | அமுதசுரபி | ஜுலியட் | தொழிற்கல்வி | 15,000.00 |
| 32 | திம்மாவரம் | அமுதசுரபி | ராஜகுமாரி | தொழிற்கல்வி | 15,000.00 |
| | | **மொத்தம்** | | | **5,70,000** |

## தனிநபர் தொழிற்கடன் பெற்றவர்கள்:

| வ. எண் | கிராமம் | குழு பெயர் | பயனாளி பெயர் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | அந்தோணியார்நகர் | லீலிமலர் கோல்பிங் | பாஸ்கல்மேரி | 10000 |
| 2 | அந்தோணியார்நகர் | வானவில் கோல்பிங் | அருள்ஜீவா | 10000 |
| 3 | ஒரகடம் | சகாயமாதா கோல்பிங் | அம்மு | 10000 |
| 4 | ஒரகடம் | ஆரோக்யமாதா கோல்பிங் | ஜெயமாலா | 10000 |
| 5 | ஒரகடம் | லூர்துமாதா கோல்பிங் | அமுதா | 10000 |
| 6 | ஒரகடம் | மாரியம்மன் கோல்பிங் | எல்லம்மாள் | 10000 |
| 7 | ஒரகடம் | கன்னியம்மன் கோல்பிங் | பச்சையம்மாள் | 10000 |
| 8 | ஒரகடம் | ஆரோக்யமாதா கோல்பிங் | ரஞ்ஜிதம் | 10000 |
| 9 | மாமல்லபுரம் | திருக்குடும்பம் | கிறிஸ்டினா | 10000 |
| 10 | நேமம் | அன்னை பாத்திமா கோல்பிங் | பத்மாவதி | 10000 |
| | | **மொத்தம்** | | **1,00,000** |

## வருமான பெருக்குத் திட்டத்தில் கடன் பெற்றவர்கள்:

| வ. எண் | பங்கு | கிராமம் | குழுவின் பெயர் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | அச்சரப்பாக்கம் | உத்தமநல்லூர் | புனித அந்தோணியார் | 1,50,000.00 |
| 2 | பெருங்கோழி | பெருங்கோழி | புனித சூசையப்பர் | 1,00,000.00 |
| 3 | பெருங்கோழி | பெருங்கோழி | ஆரோக்கியமாதா | 1,00,000.00 |
| 4 | கே.கே.புதூர் | கே.கே.புதூர் | ஆரோக்கியமாதா | 1,00,000.00 |
| 5 | ஆத்தூர் | மேல்மணப்பாக்கம் | ஓம்சக்தி கோல்பிங் | 1,00,000.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | காஞ்சிபுரம் | வையாவூர் | கலசம் கோல்பிங் | 1,00,000.00 |
| 7 | ஒட்டியம்பாக்கம் | ஒட்டியம்பாக்கம் | சகாய அன்னை | 1,00,000.00 |
| 8 | மாமல்லபுரம் | சாலவான்குப்பம் | காமராஜர் கோல்பிங் | 1,00,000.00 |
| 9 | வேடந்தாங்கல் | வளையபுத்தூர் | இணைந்த கைகள் | 1,00,000.00 |
| 10 | வேடந்தாங்கல் | வினாயகநல்லூர் | விண்ணரசி மாதா | 1,00,000.00 |
| 11 | ராஜாஜி நகர் | ஜமின்பல்லாவரம் | அறிஞர் அண்ணா | 1,00,000.00 |
| 12 | வல்லம் | இருகுன்றம்பள்ளி | செம்பருத்தி கோல்பிங் | 1,00,000.00 |
| 13 | காஞ்சிபுரம் | அய்யம்பேட்டை | திருமுழுக்கு யோவான் | 1,00,000.00 |
| **மொத்தம்** | | | | **13,50,000.00** |




















**சிறப்பு செயல்பாடுகள்:**

**சுற்றுச்சூழல் மேலாண்மை விழிப்புணர்வு பேரணி:**

07.11.2024 அன்று சுற்றுச்சூழல் மேலாண்மை குறித்த விழிப்புணர்வு பேரணி மற்றும் பொதுக்கூட்டம் நேமம் கிராமத்தில் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் 200க்கும் மேற்பட்ட கிராம பொதுமக்கள் பங்கேற்றனர் அவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.




### 3. நாபின்ஸ் நுண்கடன் திட்டம்: (Nabfins)

நாபின்ஸ் நுண்கடன் திட்டமானது கடந்த 2017 ஆம் ஆண்டுமுதல் 8 ஆண்டுகளாக சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்துடன் இணைந்து நபார்டு வங்கியின் மூலம் நிதி உதவி பெற்று செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய இரண்டு மாவட்டங்களில் 10 ஒன்றியங்களில் உள்ள ஏழை, எளிய கிராமப்புற மக்களுக்கு கடனுதவி வழங்கி பொருளாதாரத்தில் மேம்பாடு அடைய வழிகாட்டி வருகிறது. இக்கடனுதவித்தொகையானது மகளிர் குழுக்கள் (SHG) மற்றும் குழுக்கள் அல்லாத கூட்டு பொறுப்பு குழு (JLG) உறுப்பினர்களுக்கு அவர்கள் விரும்பும் தொழில்செய்து வருமானத்தை பெருக்கிக்கொள்ளவும், விவசாயம் போன்ற உற்பத்தி செயல்பாடுகளை ஊக்குவித்து பெண்களை தொழில் முனைவோராக மாற்றும் நோக்கத்திற்காக வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்பட்டு வரும் மகளிர் குழுக்கள் மற்றும் சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் பணித்தள கிராமங்களில் உள்ள கூட்டு பொறுப்புக்குழு உறுப்பினர்களுக்கு தொழில் நோக்கத்திற்காக கடந்த ஓராண்டில் நாபின்ஸ் நுண்கடன் திட்டத்தின் மூலம் ஒன்றியம் வாரியாக பெற்றுத்தரப்பட்ட கடனுதவித்தொகை மொத்தம் **ரூ.5,69,65,000 (ஐந்து கோடியே அறுபத்து ஒன்பது லட்சத்து அறுபத்து ஐந்து ஆயிரம்**) ஆகும். விவரம் பின்வருமாறு:



| வ. எண் | ஒன்றியம் | களப்பணியாளர் பெயர் | குழுக்களின் எண்ணிக்கை | உறுப்பினர் எண்ணிக்கை | பெறப்பட்ட கடன் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | திருப்போரூர் | திருமதி. ராஜேஸ்வரி | 27 | 200 | 1,42,50,000 |
| 2 | வாலாஜாபாத் | திருமதி. ஜோஸ்பின் | 10 | 53 | 29,30,000 |
| 3 | காஞ்சிபுரம் | திருமதி. ஜீலியட் ஜரின் | 25 | 113 | 57,20,000 |
| 4 | உத்திரமேரூர் 1 | திருமதி. ஜெயசீலி | 17 | 87 | 56,15,000 |
| | உத்திரமேரூர் 2 | திருமதி. கமலா | 7 | 36 | 23,45,000 |
| 5 | காட்டாங்கொளத்தூர் | திருமதி. வசந்தா | 18 | 95 | 62,80,000 |
| 6 | திருக்கழுக்குன்றம் | திரு. செல்வம் | 12 | 57 | 31,65,000 |
| 7 | அச்சிறுப்பாக்கம் 1 | திரு. வேளாங்கண்ணி | 6 | 43 | 21,20,000 |
| | அச்சிறுப்பாக்கம் 2 | திருமதி. ஸ்டெல்லா | 15 | 81 | 60,00,000 |
| 8 | இலத்தூர் | திருமதி. ராஜகுமாரி | 12 | 87 | 58,85,000 |
| 9 | சித்தாமூர் (ம) மதுராந்தகம் | திரு. ஜான்சன் | 07 | 35 | 26,55,000 |
| **மொத்தம்** | | | **156** | **887** | **5,69,65,000** |

### 4. பெண்கள் கூட்டமைப்பு:



தமிழக சமூகப்பணி மையம் (டாசோஸ்) வழிகாட்டுதலுடன் காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் 10 ஒன்றியங்களில் உள்ள பெண்கள் ஒருங்கிணைக்கப்பட்டு தற்போது செங்கல்பட்டு, காஞ்சிபுரம் இரண்டு மாவட்ட கூட்டமைப்பு பொறுப்பாளர்களைக்கொண்டு தனித்தனி இயக்கங்களாக செயல்பட்டு வருகிறது. இவ்வியக்கங்கள் பெண்களின் வாழ்வாதாரம், பொருளாதாரம், மற்றும் உரிமைகளை மீட்டெடுக்கும் நோக்கத்திற்காக துவங்கப்பட்டு 120 கிராமங்களில் 532 குழுக்களுடன் 7205 உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகிறது.

### இயக்கத்தின் நோக்கம்:

- சமுதாய வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள, ஒடுக்கப்பட்ட பெண்கள் ஒன்றுபட்டு சமூக, பொருளாதார அரசியல், கல்வி, கலாச்சாரம் மற்றும் சட்ட ரீதியான நிலைகளில் முழு ஈடுபாடு கொண்டு வாழ்வில் முன்னேற துணைபுரிதல்.
- பெண்களிடையே கூட்டமைப்பின் முக்கியத்துவம் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தி பெண்களுக்கான உரிமைகளை பெறவும், சமுதாய முன்னேற்றத்திற்கு வழிகாட்டவும் ஆர்வத்தை ஏற்படுத்துதல்.
- சமூக பிரச்சினைகளின் அடிப்படை காரணங்களை ஆராய்ந்து அவற்றை தவிர்ப்பதற்காக வழிவகுத்தல்.



- ❖ அரசு அதிகாரிகளுடன் சமூக உறவை ஏற்படுத்தி பெண்களுக்கு தேவையான உதவிகள் மற்றும் சலுகைகளையும் அரசிடமிருந்து பெற்றுத்தருதல்.
- ❖ சமூகத்தில் நலிவுற்ற பெண்களின் நிலையை உயர்த்தவும், அரசியலிலும், நிர்வாக பொறுப்புகளிலும் பெண்கள் பங்கெடுக்கவும் கூட்டமைப்பு உறுப்பினர்களை வலுப்படுத்துதல்.
- ❖ பெண்களின் முன்னேற்றத்திற்காக உழைக்கும் ஒத்த சிந்தனையுள்ள பிற அமைப்புகளுடன் இணைந்து செயல்படுதல்.
- ❖ அரசு வங்கிகள் மற்றும் தனியார் நிதி நிறுவனங்களின் மூலம் நேரடிக்கடன் பெற்று சுயதொழில் செய்து பெண்களை வாழ்வாதாரத்தில் உயர்த்துதல்.
- ❖ பெண்களுக்கு பாலின சமத்துவத்தின் முக்கியத்துவத்தை அறிய செய்து பெண்களை சுயசார்பு நிலைக்கு உயர்த்துதல்.
- ❖ பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்தல்.

**செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்ட கூட்டமைப்புகளின் கீழ் செயல்படும் குழுக்களின் விவரம்:**

| வ.எண் | ஒன்றியம் | பணியாளர் பெயர் | பஞ்சாயத்து | கிராமம் | குழுக்கள் | உறுப்பினர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1 | திருப்போரூர் | திருமதி. ராஜேஸ்வரி | | 15 | 72 | 928 |
| 2 | உத்திரமேரூர் | திருமதி. ஜெயசீலி | | 7 | 30 | 398 |
| | உத்திரமேரூர் | திருமதி. கமலாமேரி | | 8 | 36 | 467 |
| 3 | காட்டாங்கொளத்தூர் | திருமதி. வசந்தா | | 10 | 23 | 280 |
| 4 | வாலாஜாபாத் | திருமதி. ஜோஸ்பின் | | 5 | 52 | 642 |
| 5 | இலத்தூர் (ம) மதுராந்தகம் | திருமதி. ராஜகுமாரி | | 10 | 51 | 734 |
| 7 | சித்தாமூர் (ம) மதுராந்தகம் | திரு. ஜான்சன் | | 14 | 49 | 684 |
| 8 | காஞ்சிபுரம் | திருமதி. ஜீலியட் ஜரின் | | 14 | 67 | 890 |
| 9 | திருக்கழுக்குன்றம் | திரு. செல்வம் | | 11 | 41 | 560 |
| 10 | அச்சிறுப்பாக்கம் | திரு. வேளாங்கண்ணி | | 6 | 32 | 487 |
| | அச்சிறுப்பாக்கம் | திருமதி. ஸ்டெல்லாமேரி | | 13 | 38 | 573 |
| 11 | கடற்கரை பகுதி | திரு. அல்போன்ஸ் | | 7 | 41 | 562 |
| **மொத்தம்** | | | | **120** | **532** | **7205** |

**சி.ஆர்.டி.எஸ் பெண்கள் கூட்டமைப்புகளின் வழியாக ஒன்றியம் வாரியாக நேரடிக்கடன் பெற்ற குழுக்களின் விவரம்:**

| வ.எண் | ஒன்றியம் | குழுக்கள் | கடன்தொகை |
|---|---|---|---|
| 1 | திருக்கழுக்குன்றம் | 4 | 37,80,000.00 |
| 2 | காஞ்சிபுரம் | 5 | 74,50,000.00 |

| | | | |
|---|---|---|---|
| 3 | திருப்போரூர் | 16 | 1,95,00,000.00 |
| 4 | வாலாஜாபாத் | 12 | 1,01,20,000.00 |
| 5 | இலத்தூர் | 5 | 75,00,000.00 |
| 6 | சித்தாமூர் | 4 | 51,40,000.00 |
| 7 | மதுராந்தகம் | 7 | 90,50,000.00 |
| 8 | அச்சிறுப்பாக்கம் | 14 | 2,22,00,000.00 |
| 9 | கடற்கரைப்பகுதி | 8 | 74,00,000.00 |
| **மொத்தம்** | | **62** | **9,21,40,000.00** |

**சி.ஆர்.டி.எஸ் பெண்கள் கூட்டமைப்புகள் வழியாக அரசு திட்டங்கள் பெற்றவர்கள்:**

| **வ.எண்** | **அரசு திட்டங்கள்** | **பயனாளிகள்** |
|---|---|---|
| 1 | விதவை பென்சன் தொகை | 15 |
| 2 | மாற்றுத்திறனாளிகள் திட்டம் | 35 |
| 3 | முதியோர் உதவித்தொகை திட்டம் | 17 |
| 4 | அரசு இலவச பட்டா | 14 |
| 5 | பொதுக்கழிவறை திட்டம் | 1 |
| 6 | தொகுப்பு வீடு திட்டம் | 21 |
| 7 | விவசாய மானிய கடன் | 50 |
| **மொத்த பயனாளிகள்** | | **153** |

**சி.ஆர்.டி.எஸ் பெண்கள் கூட்டமைப்புகளின் அகில உலக பெண்கள் தினவிழா மார்ச்- 2025**

**பெண்கள் கூட்டமைப்பு (Women Federation):**

1. செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட பெண்கள் மேம்பாட்டு கூட்டமைப்புடன் இணைந்து **08.03.2025** அன்று காஞ்சிபுரம் தூய இதய அன்னை ஆலய சமுதாயக்கூடத்தில் **"அனைத்து பெண்களின் உரிமை, சமத்துவம், அதிகாரம்"** என்ற தலைப்பில் சர்வதேச மகளிர் தினவிழா கருத்தரங்கு நடைபெற்றது. இவ்விழாவிற்கு செங்கல்பட்டு மறைமாவட்ட ஆயர் மற்றும் சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் தலைவர் மேதகு ஆயர். நீதிநாதன் அவர்கள் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினர்களாக திருமதி. அனிஷா, உச்சநீதிமன்ற வழக்கறிஞர் அவர்கள் பெண்களின் பாதுகாப்பு குறித்தும், திருமதி. டாக்டர். நிவ்யமேரி, காஞ்சிபுரம் மீனாட்சி மருத்துவ கல்லூரி அவர்கள் பெண்கள் மருத்துவம் குறித்தும், திருமதி. இலக்கியா சுகுமார் காஞ்சிபுரம் வார்டு மாமன்ற உறுப்பினர் மற்றும் கல்விக்குழு தலைவர் அவர்கள் பெண்கள் அரசியல் தலைமைத்துவம் குறித்தும் உரையாற்றினார்கள். சி.ஆர்.டி.எஸ் நிறுவன இயக்குநர் மற்றும் செயலர் அருள்பணி. அகஸ்டின் தேவதாஸ் அவர்கள் முன்னிலை





வகித்தார். மகளிர் குழு உறுப்பினர்களின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது. காஞ்சிபுரம் மாவட்ட பெண்கள் கூட்டமைப்பு தலைவி திருமதி. கமலாமேரி அவர்கள் விழாவில் கலந்து கொண்ட மற்றும் உடனிருந்த அனைவருக்கும் நன்றி கூறினார்கள். இவ்விழாவில் 500க்கும் மேற்பட்ட மகளிர் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்.

2. செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கம் மற்றும் மதுரம் அன்னை தெரேசா பெண்கள் கூட்டமைப்பு இணைந்து **22.03.2025** அன்று திருக்கழுக்குன்றம் தொன்போஸ்கோ தொழில்நுட்ப கல்லூரி வளாகத்தில் **“அனைத்து பெண்களின் உரிமை, சமத்துவம், அதிகாரம்”** என்ற தலைப்பில் சர்வதேச மகளிர் தினவிழா கருத்தரங்கு நடைபெற்றது. இவ்விழாவிற்கு செங்கல்பட்டு மறைமாவட்ட ஆயர் மற்றும் சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் தலைவர் மேதகு ஆயர். நீதிநாதன் அவர்கள் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினர்களாக மறைமாவட்ட ஆயரின் பொதுப்பதில் குரு அருள்பணி. எஸ்தாகியூஸ் அவர்களும், திருமதி. ஜோஸ்பின் விஜி, வழக்கறிஞர் அவர்கள் பெண்களின் உரிமைகள், சட்டபாதுகாப்பு குறித்தும், திருமதி. டாக்டர். ஆமினா ஹீசைன், எஸ்.ஆர்.எம் மருத்துவ கல்லூரி உதவி பேராசிரியை அவர்கள் பெண்கள் உடல்நலம், உணவு பயன்பாடு, பெண்நலம் குறித்தும் பேசினார்கள். சி.ஆர்.டி.எஸ் நிறுவன இயக்குநர் மற்றும் செயலர் அருள்பணி. அகஸ்டின் தேவதாஸ் அவர்கள் முன்னிலை வகித்தார். மகளிர் குழு உறுப்பினர்களின் கலைநிகழ்ச்சி நடைப்பெற்றது. திருமதி. கோமதி அவர்கள் விழாவில் கலந்து கொண்ட மற்றும் உடனிருந்த அனைவருக்கும் நன்றி கூறினார்கள். இவ்விழாவில் 1500க்கும் மேற்பட்ட மகளிர் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்.




## 5. ஆக்ஷன் இந்தியன் திட்டம் (Aktion Indine)

### 1. டாக்டர். ஆர். அருளப்பா மேல்நிலைப்பள்ளி, நீர்பெயர்


ஜெர்மனியின் ஆக்ஷன் இந்தியன் மற்றும் சி.ஆர்.டி.எஸ் நிறுவனம் இணைந்து ஏழை எளிய மற்றும் விளிம்புநிலை குடும்பங்களில் உள்ள குழந்தைகளின் பள்ளி கல்வியில் முன்னேற்றம் அடைய அவர்களுக்கு நிதியுதவி செய்து வழிவகுக்கிறது. இதனால் இப்பள்ளியை சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள ஏழை எளிய குழந்தைகளின் கல்வி இடைநிற்றல் மிகவும் குறையும். மேலும் இப்பள்ளியில் உள்ள ஆசிரியர்களின் மாத ஊதியம் இத்திட்டத்தின் வழியாக வழங்கப்படுகிறது.

2. **புனித ஜான் சிறார்கள் உண்டு உறைவிட இல்லம்**

புனித ஜான் ஏழை எளிய விடுதி, டாக்டர். ஆர். அருளப்பா மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மிகவும் ஏழை, எளிய மற்றும் கைவிடப்பட்டோர்களுக்கான இல்லம். இவ்விடுதியின் மொத்த பராமரிப்பு செலவு ஆக்ஷன் இந்தியன் திட்டம் பொறுப்பேற்றுக் கொள்கிறது. சிறார்களுக்கான உணவு, உறைவிட பராமரிப்பு, பணியாளர்களுக்கான ஊதியம் போன்றவை அடங்கும்.

3. **சிறார்களுக்கான புதிய கழிவறை கட்டிடப்பணி**

பள்ளியில் பயிலும் சிறார்களுக்கு மேம்படுத்தப்பட்ட கழிவறை வசதி மிகவும் அவசியம் எனக் கருதி இத்திட்டத்தின் வழியாக புதியதாக கட்டப்பட திட்டமிடப்பட்டு தற்போது பணிகள் துவங்கப்பட்டு கட்டுமான பணிகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது.








## 6. இத்தாலி கத்தோலிக்க ஆயர் பேரவையின் (IBC) நலிவடைந்த பெண்களுக்கான சுகாதாரம் மற்றும் தொழிற்பயிற்சி திட்டம்

கோவிட்-19 பெருந்தொற்றினால் பெரும் அவதிப்பட்ட கிராமங்களில் உள்ள பெண்களின் சுகாதாரம் மேம்படுத்தவும் இத்தொற்றினால் தங்களின் வாழ்வாதாரங்களை இழந்த புலம்பெயர்ந்தவர்கள் தொழிற்பயிற்சி மூலம் தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி கொள்ள வேண்டும் என இத்தாலி கத்தோலிக்க ஆயர் பேரவை மூலம் இத்திட்டம் இலக்கு கிராமங்களில் செயல்படுத்தி வருகின்றது. இதுவரை இத்திட்டத்தின் வழியாக நடைப்பெற்ற பயிற்சிகள் மற்றும் பயனாளிகளின் விவரங்கள் கீழ்க்கண்டவாறு.

| S. no | Name of Training | No. of trainees/ Beneficiaries | Duration/Place | Date of Trg. | |
|---|---|---|---|---|---|
| | | | | From | To |
| 1 | Capacity Building Training Batch 1 | 24 Volunteers | 15 days/ Govindhapuram | 07.11.24 | 23.11.24 |
| 2 | Capacity Building Training Batch 2 | 24 Volunteers | 15 Days/karunilam | 07.11.24 | 23.11.24 |
| 3 | Community Health workers training Batch 1 | 27 Health workers | 15days/Kalivandhapattu | 25.11.24 | 10.12.24 |
| 4 | Health support training batch 1 | 27 Volunteers | 10 days/Gokulapuram | 27.11.24 | 07.12.24 |
| 5 | Health support training Batch 2 | 27 Volunteers | 10 days/ Gokulapuram | 27.11.24 | 07.12.24 |
| 6 | Basic Computer Awareness (BCA) Training Batch 1 | 20 trainees | 10 days/gokulapuram | 22.11.24 | 05.12.24 |
| 7 | Aari Embrodiery work (AEW)Training Batch 1 | 25 Trainees | 10 days/melrosapuram | 22.11.24 | 05.12.24 |
| 8 | Sanitary Napkin/tailoring Training batch 1 | 25 trainees | 15 days/senkundram | 25.11.24 | 14.12.24 |
| 9 | Health camp 1<br>Nutritional demonstration 1 | 2 days/63 persons<br>2 days/60 persons | Gudalur Area<br>MMnagar PHC | 10.12.24<br>12.12.24 | 11.12.24<br>13.12.24 |
| 10 | Health camp 2<br>Nutritional demonstration 2 | 2 days/54 persons<br>2 days/60 persons | Gokulapuram Old age home | 14.12.24<br>18.12.24 | 16.12.24<br>19.12.24 |
| 11 | Health camp 3<br>Nutritional demonstration 3 | 2 days/59 persons<br>2 days/63 persons | KarunilamCommunity hall | 27.12.24<br>30.12.24 | 28.12.24<br>31.12.24 |
| 12 | Basic Computer Awareness (BCA) Training Batch 2 | 20 trainees | 10 days/Gokulapuram | 07.12.24 | 20.12.24 |
| 13 | Artificial Jewelry making (AJM)Training batch 1 | 30 Trainees | 10 days/Marudheri | 09.12.24 | 20.12.24 |
| 14 | Sanitary Napkin/tailoring Training batch 2 | 25 trainees | 15 days/Gudalur RF | 02.01.25 | 23.01.25 |
| 15 | Aari Embrodiery work (AEW)Training Batch 2 | 25 Trainees | 10 days/Karunilam | 02.01.25 | 12.01.25 |
| 16 | Health camp 4<br>Nutritional demonstration 4 | 2days/52 persons<br>2 days/60 persons | Govindhapuram<br>El Shaddai campus | 08.01.25<br>10.01.25 | 09.01.25<br>11.01.25 |
| 17 | Health camp 5<br>Nutritional demonstration 5 | 2days/64 persons<br>2 days/50 persons | Melrosapuram/CSI campus | 05.02.25<br>07.02.25 | 06.02.25<br>08.02.25 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 18 | Jute Bag making Training Batch 1 | 30 Trainees | 15 days/Karunilam | 17.01.25 | 04.02.25 |
| 19 | Artificial Jewelry making (AJM)Training batch 2 | 30 Trainees | 10 days/Gokulapuram | 20.01.25 | 30.01.25 |
| 20 | Sanitary Napkin/tailoring Training batch 3 | 25 trainees | 15 days/ | 10.02.25 | 26.02.25 |
| 21 | Health camp 6<br>Nutritional demonstration 6 | 2days/48 persons<br>2 days/45 persons | Kadambur/Community Hall | 13.02.25<br>15.02.25 | 14.02.25<br>16.02.25 |
| 22 | Health camp 7<br>Nutritional demonstration 7 | 2days/50 persons<br>2 days/45 persons | Kalivandhapattu/<br>PU school campus | 26.02.25<br>28.02.25 | 27.02.25<br>01.03.25 |
| 23 | Health camp 8<br>Nutritional demonstration 8 | 2days/54 persons<br>2 days/48 persons | Senkundram/<br>Community Hall | 12.03.25<br>14.03.25 | 13.02.25<br>15.03.25 |
| 24 | Health camp 9<br>Nutritional demonstration 9 | 2days/46 persons<br>2 days/40 persons | Marudheri/Community hall | 26.03.25<br>28.03.25 | 27.03.25<br>29.03.25 |
| 25 | Aari Embrodiery work (AEW)Training Batch 3 | 25 Trainees | 10 days/<br>Kalivandhapattu | 20.03.25 | 31.03.25 |








7. சி.ஆர்.டி.எஸ் - ன் சிறப்பு செயல்பாடுகள்:

1. உணவக மேலாண்மை சமையற்கலை மற்றும் ஊட்டநெறி தொழில்நுட்ப பயிலக பயிற்சி:

இந்திய அரசின் சுற்றுலாத்துறை மற்றும் சி.ஆர்.டி.எஸ் நிறுவனம் இணைந்து வழங்கும் உணவக மேலாண்மை சமையற்கலை மற்றும் ஊட்டநெறி தொழில்நுட்ப பயிலக பயிற்சியானது செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய 2 மாவட்டங்களில், 10 ஒன்றியங்களில் கிராமப்புறங்களில் உள்ள மகளிர் குழுவில் உள்ள 50 வயதிற்குட்பட்ட தொழில்செய்யும் ஆர்வமுடைய 45 நபர்களை கண்டறிந்து அவர்களுக்கான 6 நாள் ஊக்கத்தொகையுடன் கூடிய பயிற்சியளிக்கபட்டு பயிற்சியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படுகிறது. இவ்வாறு 2023-2024 ஆம் நிதியாண்டில் 1580 நபர்கள் பயிற்சி பெற்றனர். இவர்களுக்கான ஊக்கத்தொகை 2024-2025 நிதியாண்டில் மத்திய அரசு சுற்றுலாத்துறை வழியாக ரூ. 28,44,000.00 (ரூபாய் இருபத்தி எட்டு லட்சத்து நாற்பத்தி நான்கு ஆயிரம்) அவரவர் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. கடந்த 2024 ஜீலை மாதம் ஒன்றியங்கள் வாரியாக பயிற்சி பெற்றவர்கள் பட்டியல் விவரம்:

| வ. எ ண் | தேதி | | ஒன்றியம் | கிராமம் | பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | துவக்கம் | முடிவு | | | |
| 1 | 22.07.24 | 27.07.24 | திருக்கழுக்குன்றம் | புதுப்பட்டிணம் | 90 |
| 2 | 22.07.24 | 27.07.24 | திருக்கழுக்குன்றம் | உய்யாளிக்குப்பம் | 90 |





**2. டி.டி.கே மருத்துவமனை குடி மற்றும் போதை ஒழிப்பு விழிப்புணர்வு முகாம்:**

சென்னை திருவான்மையூரில் உள்ள டி.டி.கே மருத்துவமனை சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தோடு இணைந்து களப்பகுதிகளில் பணியாளர்கள் வழியாக ஒரு விழிப்புணர்வு முகாமிற்கு 50 நபர்கள் என மருத்துவமனை ஆலோசகர்கள் வந்திருந்து குடி மற்றும் போதை பழக்கத்தால் ஏற்படும் உடல் பாதிப்புகள் மற்றும் சமுதாய சீர்கேடுகள் குறித்து பயிற்சி அளிக்கின்றனர். இவ்வாண்டு 366 நபர்கள் விழிப்புணர்வு பயிற்சி பெற்றுள்ளனர்.

| வ. எண் | தேதி | ஒன்றியம் | கிராமம் | பயிற்சியாளர் | பங்கு பெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | 16.09.24 | லத்தூர் | உடல்காரக்குப்பம் | திரு.முரளி, திரு.சரவணன் | 55 |
| 2 | 17.09.24 | காஞ்சிபுரம் | விப்பேடு | திரு.சாலமோன் திரு.ஆரோக்ய ஆகாஷ் | 50 |
| 3 | 18.09.24 | திருக்கழுகுன்றம் | ஆயப்பாக்கம் | திரு.முரளி, திரு.சரவணன் | 70 |
| 4 | 19.09.24 | கடற்கரைப்பகுதி | தழுதாளிக்குப்பம் | திரு.முகேஷ்குமார் திரு. பீட்டர் | 118 |
| 5 | 07.10.24 | வாலாஜாபாத் | தர்மநாயக்கன்பட்டரை | திரு.முகேஷ்குமார் | 78 |

**3. எஸ்.ஆர்.எம் மருத்துவமனை இலவச மருத்துவ முகாம்**

எஸ்.ஆர்.எம் மருத்துவமனை சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்துடன் இணைந்து கிராமப்புறங்களில் இலவச மருத்துவ முகாம் நடத்தி தருகின்றனர். இலவச மருத்துவ முகாம் தேவைப்படும் பகுதிகளுக்கு ஏற்ப நடத்தப்பட்டதில் இவ்வாண்டு உய்யாளிக்குப்பம் கிராமத்தில் நடைபெற்ற மருத்துவ முகாமில் 248 நபர்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டனர்.

**4. கிராம சபா பங்கேற்றல்:**

மே 01, ஆகஸ்டு 15, அக்டோபர் 02, நவம்பர் 14, ஜனவரி 26 ஆகிய தேதிகளில் திட்ட கிராமங்களில் நடைபெற்ற கிராம சபா கூட்டத்தில் மக்கள் அமைப்புகள் கலந்து கொண்டு தங்களது அடிப்படைத் தேவைகளான இலவச பட்டா, சாலை, குடிநீர் வசதி, கழிவுநீர் கால்வாய், தனிநபர் கழிவறை, தொகுப்பு வீடு பெறுதல் ஆகியவற்றை குறித்து கிராமசபை கூட்டத்தில் மனுக்கள் கொடுக்கப்பட்டு அடிப்படை தேவைகள் நிறைவேற்றப்படுகிறது.

**5. இலவச பட்டா:**

திருப்போரூர் ஒன்றியம் ஒரகடம் கிராமத்தில் 22க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பல ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வருகின்றனர். இவர்கள் வீட்டுவரி, குழாய்வரி ஆகிய வரிகளை முறையாக அரசுக்கு செலுத்தி வருகின்றனர். அரசின் மூலம் குடிநீர், மின்சாரம், சிமெண்ட் சாலை வசதி ஆகிய அனைத்தும் அரசினால் வழங்கப்பட்டிருந்தும், அரசின் மூலம் இலவச வீடு மற்றும் தொகுப்புவீடு திட்டங்களை பெற முடியவில்லை. சி.ஆர்.டி.எஸ் வழிகாட்டுதலில் செயல்படும் மகளிர் குழுக்களின் மூலமாக தொடர்ந்து செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டதன் அடிப்படையில் ஒரகடம் கிராமத்திலுள்ள 22

குடும்பங்களுக்கு இலவச பட்டா உயர்திரு மாவட்ட ஆட்சியரின் மூலம் வழங்கப்பட்டது.

### 6. கல்லூரி மாணவர்களின் களப்பணி பங்கேற்பு:



கல்லூரிகளில் சமூகப்படிப்பு பயிலும் மாணவ, மாணவிகள் சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்திற்கு களப்பணி அனுபவத்திற்காக ஆண்டுதோறும் வருவதுண்டு. இந்த ஆண்டு எஸ்.ஆர்.எம் கல்லூரியிலிருந்து 2 மாணவ, மாணவி களப்பணி அனுபவத்திற்காக வந்திருந்து பணியாளர்களுடன் இணைந்து சமூகப்பணியை ஆர்வத்தோடு கற்றுக்கொண்டதுடன் ஏழை, எளிய மக்களின் சுகாதார நலன் காக்கும் விழிப்புணர்வை மக்களுக்கு வழங்கினார்கள்.

எஸ்.ஆர்.எம் வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவர்கள் கிராமப்புற வேளாண்மை பணி அனுபவத்திற்காக சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் களப்பகுதியான காட்டாங்கொளத்தூர் ஒன்றியம் மேல்மணப்பாக்கம் கிராமத்திற்கு சென்று அங்குள்ள தோட்டப்பயிர்கள் பராமரிப்பு, கால்நடை வளர்ப்பு, கோழிப்பண்ணை ஆகியவற்றை பார்வையிட்டு கிராம மக்கள், மகளிர்குழு உறுப்பினர்கள், பள்ளி மாணவர்களிடையே இயற்கை விவசாயம், கால்நடைகள் வளர்ப்பின் முக்கியத்துவம், சுழற்சி முறையில் கழிவுகளை உரமாக்குதல், செயற்கை உரங்களின் பின்விளைவுகள், நெகிழியின் தீமைகள் குறித்து குறும்படம் வாயிலாக கருத்துக்களை விளக்கினார்கள். கிராமப்புற விவசாயிகளுக்கு மரக்கன்றுகளை வழங்கி இயற்கையை பேணிகாப்பதன் அவசியத்தையும் வலியுறுத்தி தங்கள் பயிற்சி அனுபவத்தை பகிர்ந்து கொண்டனர்.

### 7. ஆண்டு பொதுக்குழு கூட்டம்:



சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் 34-வது ஆண்டு பொதுக்குழு கூட்டம் 08.06.2024 அன்று காலை 10.30 மணியளவில் சி.ஆர்.டி.எஸ் அறிவர் அம்பேத்கர் பயிற்சி அரங்கில் செங்கை மறைமாவட்ட ஆயர் மற்றும் சி.ஆர்.டி.எஸ் நிறுவன தலைவர் டாக்டர் அ.நீதிநாதன் அவர்களின் தலைமையில் நடைப்பெற்றது. பொதுக்குழு கூட்டத்தில் சென்ற ஆண்டு அறிக்கை, வரவு செலவு கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டது. நிறுவனத்தின் வளர்ச்சி பணிகள் குறித்து பொதுக்குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்களின் ஆலோசனைகள் பெற்று திட்டங்களை செயல்படுத்திட கலந்தாலோசிக்கப்பட்டது. சி.ஆர்.டி.எஸ் இயக்குநர் அருள்பணி.இ.அந்தோணிராஜ் அவர்கள் இப்பொதுக்குழு கூட்டத்தை சிறப்பாக வழிநடத்தினார். இக்கூட்டத்தில் செங்கை மறைமாவட்ட ஆயரின் பொதுப்பதில்குருவும் சி.ஆர்.டி.எஸ் நிறுவன துணைத்தலைவருமான பேருள்தந்தை எஸ்தாக்கியூஸ் அவர்களும், நிறுவன புதிய செயலராக அருள்பணி. அகஸ்டின் தேவதாஸ் அவர்களும் பொதுக்குழு கூட்ட உறுப்பினர்கள் முன்னிலையில் பொறுப்பேற்றுக்கொண்டனர். இந்நிகழ்வில்

நிறுவன தலைவர், பொருளர், பங்கு அருள்பணியாளர்கள், அருள்சகோதரிகள், பொதுநிலையினர் என மொத்தம் 92 நபர்கள் இப்பொதுக்குழு கூட்டத்தில் கலந்துக்கொண்டனர்.

### 8. சி.ஆர்.டி.எஸ் - கிறிஸ்து பிறப்பு விழா பகிர்வு மற்றும் பெங்கல் புயல் நிவாரணம்:

23.12.2024 அன்று சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் கிறிஸ்து பிறப்பு விழா பணியாளர்களோடு கொண்டாடப்பட்டது. மேலும் பெங்கல் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கான புயல் நிவாரண உதவிபொருட்கள் செங்கல்பட்டு மறைமாவட்ட கத்தோலிக்க ஆயர் இல்லம், ஒரு சில பங்கு தந்தையர்கள், பள்ளி தாளாளர்கள், இதர தன்னர்வ உபகாரிகளின் உதவியோடு வழங்கப்பட்டது. புயலால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்தவர்கள், பெரும் இழப்பை சந்தித்தவர்கள், மாற்றுத்திறனாளிகள், கைம்பெண்கள் என 333 நபர்களுக்கு புயல் நிவாரணமாக அரிசி, மளிகைப்பொருட்கள், போர்வைகள், புடவை, வேஷ்டிகள் ஆகியவை சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தால் வழங்கப்பட்டது.







### செய்திதாள் அறிக்கை:



உள்ளாட்சி முரசு

ULLATCHIMURASU

**சி.ஆர்.டி.எஸ் - பெண்கள் கூட்டமைப்பின் அகில உலக பெண்கள் தினவிழா**

செங்கல்பட்டு, மார்ச்.13-

செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்க வழிகாட்டுதலின் கீழ் செயல்பட்டு வரும் காஞ்சிபுரம் மாவட்ட பெண்கள் மேம்பாட்டு சங்கம் இணைந்து 08.03.2025 அன்று காஞ்சிபுரம் தூய இதய அன்னை ஆலய சமுதாயக்கூட வளாகத்தில் "அனைத்து பெண்களின் உரிமை, சமத்துவம், அதிகாரம்" என்ற தலைப்பில் அகில உலக பெண்கள் தினவிழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வை செங்கை மறைமாவட்ட ஆயர் மேதகு டாக்டர் நீதிநாதன் அவர்கள் தலைமையேற்று வழிநடத்தினார். இந்நிகழ்வின் சிறப்பு அழைப்பாளர்களாக உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் A. அனிஷா, காஞ்சிபுரம் மீனாட்சி மருத்துவ கல்லூரி மருத்துவர் நிவ்யமேரி, காஞ்சிபுரம் தூய இதய அன்னை ஆலய பங்குதந்தை அருட்பணி. SJ பேசில் OMI, காஞ்சிபுரம் மாநகராட்சி 5வது வார்டு மாமன்ற உறுப்பினர் இலக்கியா சுகுமார் ஆகியோர் கலந்துக் கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

இதில் நிறுவன இயக்குநர் அருட்பணி. அகஸ்டின் தேவதாஸ் இந்நிகழ்வை சிறப்பாக வழிநடத்தினார். காஞ்சிபுரம் மாவட்ட கூட்டமைப்பு பொறுப்பாளர்கள், மகளிர் குழு உறுப்பினர்கள் என 2000க்கும் மேற்பட்டவர்கள் கலந்துக்கொண்டு அகில உலக பெண்கள் நாளை சிறப்பித்தனர்.



மாலை முரசு

சென்னைப் பதிப்பு

www.malaimurasu.com

திங்கட்கிழமை

24-03-2025 (பங்குனி 10)

மாலை முரசு ★ 24-03-2025

திருக்கழுக்குன்றத்தில்

**கிராமப்புற மேம்பாட்டு சங்கம் சார்பில் சர்வதேச மகளிர் தினவிழா!**

தமிழ் முரசு
நம்பர் 1 மாலை நாளிதழ்

சுஜம் கலந்துகொண்டனர். வாசகத்தையும் வடிவமைத் னர்.



சுனாமி தினத்தை முன்னிட்டு, செங்கல்பட்டு மாவட்டம் கல்பாக்கம் அடுத்த கடலூர் பெரியகுப்பம் கிராமத்தில் சுனாமியால் இறந்தவர்களுக்கு அப்பகுதி மீனவர்கள், கிராம பஞ்சாயத்தார்கள், மகளிர் சுய உதவிக்குழுவினர் மற்றும் செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டு சங்கத்தினர் கடலில் மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

**முடிவுரை:**

செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கம். கடந்த 34 ஆண்டுகளாக சமூகத்தில் மிகவும் பின்தங்கிய அடித்தட்டு மக்களுக்கும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், பணிகளைச் செய்து கொண்டு வருகின்றது. அதன் அனைத்து செயல்பாடுகளினாலும் ஏராளமான மக்கள் கல்வியிலும், பொருளாதாரத்திலும், சமூகத்திலும், உயர்ந்துள்ளனர்.

இந்நிறுவனத்தின் பல்வேறு வளர்ச்சிப்பணிகளில் உறுதுணையாய் இருந்து இந்நிறுவனத்தை வழிநடத்திவரும் நிறுவனத்தலைவர் மேதகு.ஆயர்.டாக்டர்.நீதிநாதன் அவர்களுக்கும், இந்நிறுவனத்தின் துணைத்தலைவராக இருந்து நிறுவனத்தின் செயல்பாடுகளை ஊக்குவிக்கின்ற துணைத்தலைவர் அருள்பணி. எஸ்தாகியூஸ் அவர்களுக்கும், பொருளர் அருள்பணி. ஆனந்தன் அவர்களுக்கும், ஆயரின் ஆலோசனைக்குழு உறுப்பினர்கள், பங்கு அருள்பணியாளர்கள், அருள்சகோதரிகள், இலக்கு மக்கள், நன்கொடையாளர்கள், உபகாரிகளான காரிதாஸ் இந்தியா, கோல்பிங் இந்தியா, நாபின்ஸ் நுண்கடன் நிறுவனம், The Littleway Association மற்றும் இதர வங்கி நிறுவனங்கள், செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், கூட்டமைப்பு பொறுப்பாளர்கள், மகளிர் குழு உறுப்பினர்கள் மற்றும் கடைநிலையில் உள்ள மக்களுக்காக சமூக பணியில் அயராது உழைத்துக்கொண்டிருக்கும் எம் நிறுவன பணியாளர்கள் அனைவருக்கும் சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். நம் நிறுவனத்தலைவரோடு இணைந்து ஒன்றுசேர்ந்து கரம்கோர்த்து இந்நிறுவனத்தை உயர்த்துவோம். பொருளாதாரத்தில் நமது நிறுவனமும், நமது நிறுவனத்தோடு தொடர்புடைய அனைத்து மக்களும் தன்னிறைவு அடைய இணைந்து செயல்படுவோம்.

## சி.ஆர்.டி.எஸ் நிர்வாக குழு

| வ.எண் | பெயர் | முகவரி | பொறுப்பு |
|---|---|---|---|
| 1 | மேதகு.ஆயர்.நீதிநாதன் | செங்கல்பட்டு மறைமாவட்டம், ஆயர் இல்லம், திம்மாவரம், செங்கல்பட்டு மாவட்டம் - 603101 | நிறுவன தலைவர் |
| 2 | அருள்பணி. எஸ்தாகியூஸ் | செங்கல்பட்டு மறைமாவட்ட பொதுபதில்குரு, ஆயர் இல்லம், திம்மாவரம், செங்கல்பட்டு மாவட்டம் - 603101 | துணைத் தலைவர் |
| 3 | அருள்பணி.ஆனந்தன் | செங்கல்பட்டு மறைமாவட்ட பொருளாளர் ஆயர் இல்லம், திம்மாவரம், செங்கல்பட்டு மாவட்டம் - 603101 | பொருளாளர் |
| 4 | அருள்பணி.அகஸ்டின் தேவதாஸ் | சி.ஆர்.டி.எஸ் இயக்குநர். செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கம், திம்மாவரம், செங்கல்பட்டு 603101 | செயலாளர் |
| 5 | திரு.செல்வராஜ் | ஆர்.என்.கண்டிகை கிராமம், காஞ்சிபுரம் மாவட்டம் | உறுப்பினர் |
| 6 | திருமதி.ஸ்டெல்லா | நெ.14/2, செல்லியம்மன் தேரடி தெரு, மதுராந்தகம், செங்கல்பட்டு மாவட்டம் 603306 | உறுப்பினர் |
| 7 | அருள்பணி.அந்தோணிராஜ் | புனித யூதா ததேயு திருத்தலம், வானுவம்பேட்டை, செங்கல்பட்டு மாவட்டம் | உறுப்பினர் |
| 8 | அருள்சகோதரி.நம்பிக்கை மேரி | புனித மரியாள் கன்னியர் மடம், செங்கல்பட்டு- 603101 | உறுப்பினர் |
| 9 | திரு.அந்தோணிதாஸ் | நெ.55,விப்பேடு, மேல்கதிர்பூர், காஞ்சிபுரம் மாவட்டம் - 603502 | உறுப்பினர் |
| 10 | திருமதி.கீதா | நெ.584/3, பாலமுருகன் தெரு, இருங்குன்றபள்ளி, செங்கல்பட்டு மாவட்டம் - 603002 | உறுப்பினர் |
| 11 | திரு.பெஞ்சமின் | நெ.74, புலிப்பாக்கம், தந்தை பெரியார் தெரு, செங்கல்பட்டு - 603002 | உறுப்பினர் |

# OUR SINCERE THANKS TO.......

Caritas INDIA
*The Joy of Service...*

KOLPING INDIA

TAMILNADU SOCIAL SERVICE SOCIETY
TASOSS

DIOCESE OF CHINGLEPUT

Conferenza Episcopale Italiana

The Little Way Association

Address: Chengalpattu Rural Development Society,
No: 199A/4, Kancheepuram High Road,
Thimmavaram, Chengalpattu District - 603101
Tamil Nadu, South India.

crdskanchi@gmail.com
crdschengai@rediffmail.com

www.crdschengai.com

crds chengai

crdskanchi

CRDS DSSS

chengalpattu rural development society

OUR SPECIAL THANKS TO GOVERNING BODY MEMBERS AND THE STAFF OF CRDS